# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

# 1987 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, மனித இழையங்களை மாற்றிப் பொருத்துதல் சட்டம்

*[1987, திசெம்பர் மாதம் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1987, திசெம்பர் மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.20 — தபாற் செலவு : சதம் 75

## 1987 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, மனித இழையங்களை மாற்றிப் பொருத்துதல் சட்டம்

[1987 திசெம்பர் 11 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 6/82
1768

**நோய் மாற்ற, அறிவியல், கல்விசார் அல்லது ஆராய்ச்சி நோக்கங்களுக்காக மனித உடல்களையும், இழையங்களையும் நன்கொடை அளித்தலுக்கும்; அத்தகைய இழையங்களை அகற்றி அவற்றை உயிருள்ள ஆட்களுக்குப் பயன்படுத்தலுக்கும்; அத்தகைய இழையங்களைப் பாதுகாத்தலுக்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1987 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, மனித இழையங்களை மாற்றிப் பொருத்துதல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட ஆளெவரும், மருத்துவக் கல்வியை அல்லது பல்மருத்துவக் கல்வியை முன்னேற்றுவதற்காக, ஆராய்ச்சி நோக்கங்களுக்காக, மருத்துவ அறிவியலை அல்லது நோய் மாற்றலை முன்னேற்றுவதற்காகப் பயன்படுத்தப்படுவதற்கென அல்லது உயிருள்ள ஆளெவருக்கும் பயன்படுத்துவதற்கென அவரது உடலை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது ஏதேனும் இழையத்தை, அவரது இறப்பின்மேல் பயனுறுகின்றவாறு (இதனகத்துப்பின்னர் "இறப்பின் மேல் பயனுறுகின்ற நன்கொடை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நன்கொடை அளிப்பதற்குச் சம்மதிக்கலாம். இறப்பின்மேல் நன்கொடை கள் பயனுறுதல் வேண்டும்.

3. (1) இறப்பின்மேல் பயனுறுகின்ற நன்கொடையொன்றுக்கான சம்மதம், நன்கொடை அளிப்பவரினால், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தகுதிவாய்ந்த சாட்சிக்காரர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு எழுத்தில் கொடுக்கப்படலாம் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தகுதிவாய்ந்த சாட்சிக்காரர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் கொடுக்கப்படலாம் அல்லது ஆகக்குறைந்தது இரண்டு தகுதிவாய்ந்த சாட்சிக்காரர்கள் முன்னிலையிலாவது வாய்மொழி மூலம் கொடுக்கப்படலாம். இறப்பின்மேல் பயனுறுகின்ற நன்கொடையொன்றுக்கான சம்மதம் எவ்வாறு கொடுக்கப்படவேண்டும் என்பது.

(2) இறப்பின் மேல் பயனுறுகின்ற நன்கொடையின் நோக்கத்தை, நன்கொடை அளிப்பவர் அவரது சம்மதத்தில் குறித்துரைக்கவில்லை என்ற நிகழ்வு மட்டும், வேறுவகையில் செல்லுபடியுள்ளதாகவிருக்கக்கூடிய இறப்பின் மேல் பயனுறுகின்ற நன்கொடையொன்றை செல்லுபடியற்றதாக்குவதற்குப் போதுமானதாதல் ஆகாது.

4. (1) இறப்பின் மேல் பயனுறுகின்ற நன்கொடையொன்று பின்வருபவர்களுக்குச் செய்யப்படலாம் :— நன்கொடை பெறுநர்.

(அ) ஏதேனும் அரசாங்க ஆசுப்பத்திரி;

(ஆ) எவரேனும் மருத்துவத் தொழிலர்;

(இ) எவரேனும் பல் மருத்துவர்; அல்லது

(ஈ) ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட நிறுவனம்.

(3) நன்கொடை அளிப்பவர் நன்கொடை பெறுநரைக் குறித்துரைக் காதவிடத்து அல்லது நன்கொடை பெறுநர் இல்லாதவிடத்து, நன் கொடை அளிப்பவர் எவ்விடத்தில் இறந்தாரோ அவ்விடத்துக்கு மிக அருகிலிருக்கும் அரசாங்க ஆசுபத்திரி அல்லது ஏதேனும் விதித்துரைக் கப்பட்ட நிறுவனம் நன்கொடை பெறுநராகக் கருதப்படுதல் வேண்டும்.

இறந்த ஆளினது உடலை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது ஏதேனும் இழையத்தை அகற்றுவதற்கு சம்மதம் அளிக்கக்கூடியவர்களான அத்தகைய இறந்தவரின் எவரேனும் உறவினர்கள்.

5. (1) இறப்பின் மேல் பயனுறுகின்ற நன்கொடையொன்றுக்கான சம்மதத்தை அளித்திருக்காத எவரேனும் ஆளின் இறப்பின்மீது, அத்தகைய இறந்த ஆள் அவரின் வாழ்நாளின்போது, எந்நேரத்திலாவது ஏதேனும் முரணான முன்னத்தைத் தெரிவித்திருக்காவிட்டால், 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுள் எவற்றுக்காகவும், அத்தகைய இறந்த ஆளினது, 21 வயதுக்கு மேற்பட்ட அடுத்த நெருங்கிய இரத்த உறவினர் தனது சம்மதத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளினது உடலை அல்லது அத்தகைய பாகத்தை அல்லது அத்தகைய இழையத்தை அகற்றுதலுக்கான அத்தகைய முற்போந்த சம்மதத்தை எழுத்தில் கொடுப்பது, அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஏதேனும் பிள்ளையின் இறப்பின்மீது, பெற்றோர் இருவரும் அல்லது பெற்றோருள் ஒருவர் இல்லாதிருந்தால் அல்லது தகைமையீனமுடையவராக இருந்தால், மற்ற பெற்றோர் அல்லது பெற்றோர் இருவரும் இல்லாதிருந்தால் அத்தகைய பிள்ளையின் பாதுகாவலர் 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்படக்கூடிய நோக்கங்கள் எவற்றுக்காகவும் அவரது சம்மதத்தில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிள்ளைகளின் உடலை அல்லது அத்தகைய பாகத்தை அல்லது அத்தகைய இழையத்தை அகற்றுதலுக்கான அத்தகைய முற்போந்த சம்மதத்தை எழுத்தில் கொடுப்பது அவருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட சம்மதம் எதுவும், அத்தகைய சம்மதத்தில் நன்கொடை பெறுநர் குறித்துரைக்கப்பட்டிருந்தாலே ஒழிய செல்லுபடியுடையதாதல் ஆகாது.

(4) இப்பிரிவின்கீழான நன்கொடைபெறுநர் 4 ஆம் பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்டவாறான அதே ஆளாக இருத்தல் வேண்டும்.

இறப்பின்மேல் பயனுறுகின்ற நன்கொடையொன்றுக்கு அளிக்கப்பட்ட சம்மதத்தை நன்கொடை அளிப்பவர் ஒழிக்கலாம்.

6. நன்கொடை அளிப்பவர் அவரது வாழ்நாளின் போதும், நன்கொடை பெறுநரின் அல்லது வேறு எவரேனும் ஆளினது சம்மதமின்றியும் இறப்பின்மேல் பயனுறுகின்ற நன்கொடையொன்றுக்கு அளிக்கப்பட்ட சம்மதத்தை, பின்வரும் விதங்களில் முழுமையாகவோ பகுதியளவிலோ ஒழிக்கலாம் :—

(அ) இறப்பின்மேல் பயனுறுகின்ற அத்தகைய நன்கொடைக்கான எழுத்திலான சம்மதம் கொடுக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து எழுத்துமூலம்;

(ஆ) இறப்பின்மேல் பயனுறுகின்ற நன்கொடையொன்றுக்கான சம்மதம் விதிக்கப்பட்ட படிவம் ஒன்றில் கொடுக்கப்பட்டிருக்கும் விடயத்தில், அவ்வாறு ஒழிக்கின்ற அவரது முன்னத்தை நன்கொடை பெறுநருக்கு எழுத்தில் தெரிவிப்பதன் மூலம்.

7. (1) இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட ஆளெவரும் 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நோக்கங்களுக்காக அவரது சம்மதத்தில் அவரால் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய மீள் பிறப்பாக்கத்தகா இழையங்களை அவரது உடலிலிருந்து அவரது வாழ்நாளின் போது அகற்றுதலுக்கான (இதனகத்துப்பின்னர் "வாழ்நாளின்போதான நன்கொடை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அவரது அத்தகைய சம்மதத்தை, எழுத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியிடம் பதிவுசெய்துகொள்ளலாம்.

மாற்றிப் பொருத்துவதற்காக மீள் பிறப்பாக்கத்தகா இழையங்களை வாழ்நாளின் போது அகற்றுதலுக்கு வயது வந்த உயிர் வாழும் ஆள் சம்மதம் அளித்தல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அத்தகைய சம்மதம், எவரேனும் ஆளினால் அளிக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய இழையத்தைப் பயன்படுத்துவதற்கு ஆயத்தமாகின்ற மாற்றிப் பொருத்தும் குழுவைச் சேர்ந்த மருத்துவ ஆலோசகர் ஒருவர் தவிர்ந்த வேறு மருத்துவ ஆலோசகர் ஒருவர், வாழ்நாளின்போதான அத்தகைய மீள் பிறப்பாக்கத்தகா இழையங்களில் நன்கொடை ஆக்கப்பட முன்னர், பின்வருவனவற்றை எழுத்தில் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும் :—

(அ) அத்தகைய சம்மதம் அளிக்கப்பட முன்னர், அத்தகைய ஆளின் உடலிலிருந்து அத்தகைய சம்மதத்தில் குறித்துரைக்கப்பட்ட இழையத்தினை வாழ்நாளின்போது அவ்வாறு நன்கொடையளிப்பதன் தன்மையையும், விளைவுகளையும்பற்றி அத்தகைய ஆளுக்கு விளங்கப்படுத்தினாரென்பது பற்றியும்;

(ஆ) அத்தகைய சம்மதம் அளிக்கப்பட்ட நேரத்தில் அத்தகைய ஆள்,

(i) இருபத்தொரு வயதை அடைந்திருந்தாரென்றும்,

(ii) சித்த சுவாதீனமுடையவராயிருந்தாரென்றும், அத்துடன்

(இ) அத்தகைய ஆள் அவரது சம்மதத்தைத் தன் முன்னிலையில் சுதந்திரமாக அளித்தாரென்றும் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.

(3) எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழ் எத்தகைய மீள் பிறப்பாக்கத்தகா இழையம் தொடர்பாக சம்மதமானது அளிக்கப்பட்டுள்ளதோ அவ்விழையத்தை உடலிலிருந்து அகற்றிப் பாவனைக்கு ஆயத்தப்படுத்துவது எவரேனும் விதித்துரைக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் சம்மதம் அளித்துள்ள ஆளெவரும் அத்தகைய சம்மதத்தை வாழ்நாளின்போதான நன்கொடைக்கு முன்னர் எந்நேரத்திலாவது எழுத்துமூலம் மீளப் பெறலாம்.

(5) இப்பிரிவின்கீழான கொடைபெறுநர் 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவர்கள் போன்ற அதே ஆட்களாக இருத்தல் வேண்டும்.

வாழ்நாளின் போதான மீளப் பிறப்பாக்கத்தகும் இழையங்களின் நன்கொடை.

8. (1) மீள் பிறப்பாக்கத்தகும் இழையத்தினை ஒரு பிள்ளையின் அல்லது ஆளின் குடும்பத்தைச்சேர்ந்த வேறோர் உறுப்பினருக்கு மாற்றிப் பொருத்தும் நோக்கத்துக்காக, பிள்ளையொன்றின் பெற்றோர் இருவரும் அல்லது பெற்றோருள் ஒருவர் இல்லாவிடின் அல்லது தகைமையற்றவராக் விருந்தால், மற்றைய பெற்றோர் அல்லது பெற்றோர் இருவரும் இல்லாவிடின் அத்தகைய பிள்ளையின் பாதுகாவலர் அவரது சம்மதத்தில் குறித்துரைக் கப்படக்கூடிய அத்தகைய மீளப் பிறப்பிக்கத்தகு இழையத்தை, அத்தகைய பிள்ளையின் உடலிலிருந்து வாழ்நாளின் போதான நன்கொடை அளிப்பதற்காக அவரது சம்மதத்தை எழுத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமை அதிபதியிடம் பதிவுசெய்துகொள்ளலாம் ; அல்லது

(2) மீள்பிறப்பாக்கத்தகும் இழையத்தினை இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட ஓர் ஆளின் குடும்பத்தைச் சேர்ந்த வேறோர் உறுப்பினருக்கு மாற்றிப்பொருத்தும் நோக்கத்துக்காக இருபத்தொரு வயதுக்கு மேற்பட்ட ஆளெவரும், அவரது சம்மதத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய மீளப்பிறப்பிக்கத்தகு இழையத்தை அத்தகைய ஆளின் உடலிலிருந்து வாழ்நாளின் போதான நன்கொடை அளிப்பதற்காக அவரது சம்மதத்தை எழுத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமை அதிபதியிடம் பதிவு செய்துகொள்ளலாம்.

(3) ஓராம், 2 ஆம் உட்பிரிவுகளின் அத்தகைய சம்மதமானது கொடுக் கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய இழையத்தைப் பயன்படுத்துவதற்கு ஆயத்தமாகின்ற மாற்றிப்பொருத்தும் குழுவைச் சேர்ந்த மருத்துவ ஆலோசகர் ஒருவர் அல்லாத மருத்துவ ஆலோசகர் ஒருவர், வாழ்நாளின் போதான அத்தகைய மீள் பிறப்பாக்கத்தகு இழையங்கள் நன்கொடை செய்யப்படு முன்னர்—

(அ) அத்தகைய சம்மதம் கொடுக்கப்படுமுன்னர், விடயத்துக்கேற்ப அத்தகைய பிள்ளையின் அல்லது ஆளின் உடலிலிருந்தான அத்தகைய சம்மதத்தில் குறித்துரைக்கப்பட்ட இழையத்தின் வாழ்நாளின் போதான அத்தகைய நன்கொடையின் தன்மையும், விளைவுகளும் பற்றி, விடயத்திற்கேற்ப, அத்தகைய பெற்றோருக்கு, பாதுகாவலருக்கு, அல்லது ஆளுக்கு விளங்கப்படுத்தினரென்பது பற்றியும் ;

(ஆ) அத்தகைய சம்மதமானது அவரது முன்னிலையில் சுதந்திரமாகக் கொடுக்கப்பட்டது என்பது பற்றியும்,

எழுத்தில் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.

(4) எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் முரணாகை ஏது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின்கீழ் எந்த மீள் பிறப்பாக்கத்தகு இழையம் தொடர்பாக சம்மதமானது கொடுக்கப்பட்டுள்ளதோ அவ்விழையத்தை உடலிலிருந்து அகற்றிப் பாவனைக்கு ஆயத்தப்படுத்துவது எவரேனும் விதித்துரைக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளருக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(5) ஓராம், 2 ஆம் உட்பிரிவுகளின்கீழ் சம்மதம் கொடுத்த எவரேனும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அல்லது ஆள் அத்தகைய சம்மதத்தை வாழ்நாளின் போதான நன்கொடைக்கு முன்னர் எந்நேரத்திலாவது எழுத்துமூலம் மீளப் பெறலாம்.

(6) இப்பிரிவின்கீழான நன்கொடைபெறுநர், 4 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவர்கள் போன்ற அதே ஆட்களாக இருத்தல் வேண்டும்.

*இறந்த ஆளின் உடலை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது ஏதேனும் இழையத்தை அகற்றுவதற்கான அதிகாரம்.*

9. (1) இறப்பின்மேல் பயனுறுகின்ற நன்கொடையொன்றுக்கான சம்மதம் எவ்வாளினால் கொடுக்கப்பட்டதோ அவ்வாள் இறக்குமிடத்து, அத்தகைய உடல் நல்லடக்கம் செய்யப்படுவதற்கான அல்லது தகனஞ்செய்யப்படுவதற்கான நோக்கங்களுக்காக மட்டும் அல்லது அத்தகைய நல்லடக்கத்துக்கு அல்லது தகனத்துக்கு இடைநேர் விளைவான ஏதேனும் நோக்கத்துக்காக எவ்வாளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதோ, அவ்வாள் தவிர்ந்த அத்தகைய இறந்த ஆளினது உடலின் உடைமையை, இறப்பின் பின்சட்டமுறையாகக் கொண்டுள்ள நெருங்கிய உறவினர் அல்லது எவரேனும் ஆள், அத்தகைய இறப்பின் மேல் பயனுறுகின்ற நன்கொடைக்காகக் கொடுக்கப்பட்ட சம்மதமானது, அதனைத்தொடர்ந்து 6 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு இல்லாதொழிக்கப்பட்டிருக்கின்றதென விடயத்துக்கேற்றவாறு அத்தகைய நெருங்கிய உறவினர் அல்லது அத்தகைய உடலைச் சட்டமுறையாக உடைமையில் கொண்டுள்ள ஆள் நம்புவதற்குக் காரணம் இருந்தாலொழிய, அத்தகைய சம்மதத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய உடலை அல்லது அத்தகைய பாகத்தை அல்லது அத்தகைய இழையத்தை அகற்றுவதற்கு அதிகாரமளிக்கலாம். அத்துடன், அதன்மேல் நன்கொடைபெறுநர், விடயத்துக்கேற்றவாறு, அத்தகைய உடலுக்கு அல்லது அத்தகைய பாகத்துக்கு அல்லது அத்தகைய இழையத்துக்கு உரிமையுடையவராதல் வேண்டும் என்பதுடன் 2 ஆம் பிரிவில் குறிப்பிடுசெய்யப்பட்ட ஏதேனும் நோக்கங்களுக்காக, குறிப்பிட்ட நோக்கமெதுவும் குறித்துரைக்கப்பட்டில்லாதிருக்கின்றவிடத்து அதனைப் பயன்படுத்துவதற்கும் உரிமையுடையவராதலும் வேண்டும்.

(2) விதித்துரைக்கப்பட்ட தொழிநுட்பவியலாளர் எவரும் அத்தகைய ஆளின் இறப்பு, மருத்துவத் தொழிலர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டபின்னர், அத்தகைய பாகத்தை அல்லது இழையத்தை உடலில் இருந்து அகற்றிப் பாவனைக்கு ஆயத்தப்படுத்தலாம்.

*ஆசுப்பத்திரியில் இறக்கின்ற ஆளொருவரின் அல்லது எந்த ஆளின் உடல் ஆசுப்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதோ அவ்வாளின் உடலை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது இழையத்தை அகற்றுவதற்கான அதிகாரம்.*

10. (1) ஏதேனும் ஆசுப்பத்திரியில் விதித்துரைக்கப்பட்ட அலுவலரொருவருக்கு, சூழ்நிலைகளுக்கு நியாயமாகவான அத்தகைய விசாரணைகளை மேற்கொண்டபின்னர், எவ்வாளின் இறப்பு அத்தகைய ஆசுபத்திரியில் நிகழ்ந்ததோ அவ்வாளின் அல்லது எந்த ஆளின் உடல் அத்தகைய ஆசுபத்திரிக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதோ அவ்வாள் எவரும்—

(அ) இறப்பின் மீது பயனுறுகின்ற நன்கொடையொன்றுக்கான சம்மதத்தைக் கொடுத்திருக்கிறாரென்று ; அத்துடன்

(ஆ) ஆறும் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அத்தகைய சம்மதத்தை இல்லாதொழிக்கவில்லை என்று,

தோன்றுகின்றவிடத்து, அத்தகைய விதித்துரைக்கப்பட்ட அலுவலர், இப் பிரிவின் நோக்கத்துக்காக விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், அத்தகைய சம்மதத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய அதன் அத்தகைய பாகத்தை அல்லது அத்தகைய இழையத்தை உடலிலிருந்து நன்கொடை பெறுநர் அகற்றுதலுக்கு அதிகாரமளிக்கலாம்.

(2) விதித்துரைக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளர் எவரும், அத்தகைய ஆளின் இறப்பு மருத்துவ தொழிலர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின்னர், அத்தகைய பாகத்தை அல்லது இழையத்தை உடலிலிருந்து அகற்றிப் பாவனைக்கு ஆயத்தப்படுத்தலாம்.

மறியற்சாலைக்குள் இறக்கின்ற மறியல்காரர் ஒருவரின் உடலை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது ஏதேனும் இழையத்தை அகற்றுவதற்கான அதிகாரம்.

11. (1) ஏதேனும் மறியற்சாலையின் மறியற்சாலைகள் கண்காணிப்பாளருக்கு அல்லது அதன் சார்பாக அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய வேறு அலுவலருக்கு, சூழ்நிலைகளில் அவசியமாகக்கூடிய அத்தகைய விசாரணைகளை மேற்கொண்டபின்னர், எந்த மறியல்காரரின் இறப்பு அத்தகைய மறியற்சாலையில் நிகழ்ந்ததோ அம்மறியல்காரர்—

(அ) இறப்பின் மேல் பயனுறுகின்ற நன்கொடையொன்றுக்கான சம்மதத்தைக் கொடுத்திருந்தார் என்றும் ; அத்துடன்

(ஆ) ஆறும் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அத்தகைய சம்மதத்தை மீளப்பெற்றிருக்கவில்லை என்றும்,

தோன்றுமிடத்து, அத்தகைய கண்காணிப்பாளர் அல்லது வேறு அலுவலர், அத்தகைய மறியற்காரரின் உடலானது பாதுகாவலரின் சம்மதத்துடன் அத்தகைய பாதுகாவலரால் கோரப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய இறப்புப்பற்றி நீதிவான் மூலமான விசாரணை செய்யப்பட்டபின்னர், அத்தகைய சம்மதத்தில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய மறியல்காரரின் உடலை அல்லது அதன் அத்தகைய பாகத்தை அல்லது இழையத்தை நன்கொடை பெறுநர் அகற்றுதலுக்கு எழுத்தில் அதிகாரமளிக்கலாம்.

(2) விதித்துரைக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளர், அத்தகைய எவரேனும் ஆளின் இறப்பு மருத்துவத் தொழிலர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பின்னர், அத்தகைய பாகத்தை அல்லது இழையத்தை உடலிலிருந்து அகற்றிப் பாவனைக்கு ஆயத்தப்படுத்தலாம்.

கோரப்படாத உடல்களைப் பிரேத பரிசோதனைக்காக அல்லது உடல்சார் ஆராய்ச்சிகளுக்காக, அகற்றுவதற்கு, அதிகாரமளிப்பதற்கான தத்துவம்.

12. ஏதேனும் இறந்த உடலானது, ஏதேனும் ஆசுப்பத்திரியில் அல்லது வேறு நிறுவனத்தில், இறந்த தேதியிலிருந்து ஏழு நாட்களுக்கு மேலாக இருக்குமிடத்து, அத்தகைய ஆசுபத்திரியின் அல்லது வேறு நிறுவனத்தின், விதித்துரைக்கப்பட்ட அலுவலர் ஏதேனும் பிரேத பரிசோதனைக்காகவும் அதன்பின்னர் ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட நிறுவனத்தால் உடல்சார் ஆராய்ச்சி செய்யப்படுவதற்காகவும் அத்தகைய இறந்த உடலை அகற்றுவதற்கு அதிகாரமளிக்கலாம்.

13. (அ) நோக்கமானது சம்மதத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில் அத்தகைய கொடைபெறுநரின் சம்மதத்தில் ; அல்லது

(ஆ) நோக்கம் எதுவும் சம்மதத்தில் குறித்துரைக்கப்படாத ஏதேனும் விடயத்தில் 2 ஆம் பிரிவில்,

குறித்துரைக்கப்பட்ட நோக்கமொன்று தவிர்ந்த வேறு ஏதேனும் நோக்கத்துக்காக இச்சட்டத்தின்கீழ் நன்கொடையளிக்கப்பட்ட ஏதேனும் மனித உடலை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை அல்லது இழையத்தைப் பயன்படுத்துகின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஓராண்டு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஓராயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும். ஏதேனும் மனித உடலை அல்லது அதன் பாகத்தை அல்லது இழையத்தை அது எந்த நோக்கத்துக்காக நன்கொடை அளிக்கப்பட்டதோ அந்த நோக்கம் தவிர்ந்த வேறு நோக்கத்துக்காகப் பயன்படுத்துதல் ஆகாது.

14. இச்சட்டத்தின்கீழ் இழையமொன்று மனித உடலொன்றிலிருந்து அகற்றப்படுகின்றவிடத்து, அது மாற்றிப் பொருத்தப்படுகின்ற வரையில் காலத்துக்குக்காலம் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஏதேனும் இடத்திலும் அத்தகைய நிபந்தனைகளின் கீழும் அதனை வைத்துப் பேணிப் பாதுகாத்தல், எந்தக் குறித்துரைக்கப்பட்ட தொழில்நுட்பவியலாளர் அதனை உடலிலிருந்து அகற்றுகிறாரோ அந்தத் தொழில் நுட்பவியலாளரின் கடமையாதல் வேண்டும் : இழையங்களைப் பேணிப் பாதுகாத்தல்.

ஆயின், எவ்வாறாயினும், மாற்றிப் பொருத்துதலைப் புரிகின்ற மருத்துவத் தொழிலர் மனித உடலிலிருந்து ஏதேனும் இழையத்தை அகற்றி அதனை அத்தகைய ஏதேனும் இடத்துக்குப் பாதுகாத்தலுக்காக அனுப்பாமலேயே உடனடியாக மாற்றிப் பொருத்துவது பொருத்தமானதெனக் கருதுகின்ற ஏதேனும் விடயத்தில் இப்பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

15. (1) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக ஆளொருவரின் இறப்பு, அத்தகைய ஆளினது மூளையின் எல்லாப் பணிகளினதும், மாற்ற முடியாத இல்லாதொழிப்பு நிகழ்ந்துள்ளபோது நிகழ்கிறது. இறப்பு என்பதன் பொருள்.

(2) மூளையின் எல்லாப் பணிகளினதும் மாற்றமுடியாத இல்லாதொழிப்பு, இயற்கை இரத்தச் சுற்றோட்ட மற்றும், சுவாசகப் பணிகள் நீடித்து இல்லாதிருக்கின்றமையினால் தீர்மானிக்கப்படலாம்.

(3) இயற்கை இரத்தச் சுற்றோட்ட மற்றும், சுவாசப் பணிகள் நீடித்து இல்லாதிருக்கின்றமையை (செயற்கை ஆதாரவுக்கான வழிவகைகளைப்) பயன்படுத்துவதன் மூலம் தீர்மானிக்க இயலாதிருக்கும் வேளையில் மூளையின் பணிகளின் மாற்ற முடியாத இல்லாதொழிப்பு, தற்போதைய மருத்துவத் தொழிலின் சாதாரண நியமங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வழிவகைகளினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

இறப்பை அத்தாட்சிப்படுத்துகின்ற மருத்துவத் தொழிலர் மாற்றிப் பொருத்துவதில் பங்குபற்றாதிருத்தல்.

16. (1) எவரேனும் ஆளினது இறப்பை அத்தாட்சிப்படுத்தியுள்ள மருத்துவத் தொழிலர் எவரும், அத்தகைய ஆளினது உடலின் ஏதேனும் இழையத்தினை அல்லது பாகத்தினை மாற்றிப் பொருத்துதல் எதிலும் பங்குபற்றுதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவுக்கு முரணைச் செயலாற்றுகின்ற மருத்துவத் தொழிலர் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓராண்டு காலத்துக்கான இரு வகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஓராயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவிலுள்ளஎதெதுவும், விழிவெண்படலத்தை மாற்றிப் பொருத்துவதில் பங்குபற்றுகின்ற மருத்துவத் தொழிலரை எவ்விதத்திலும் பாதித்தலாகாது.

உடலொன்றினை அல்லது அதன் ஏதேனும் பாகத்தினை அல்லது இழையத்தினை விற்பனைசெய்தல், கையாளுதல் அல்லது கையுதிர்த்தல் எதுவும், தடைசெய்யப்பட்டுள்ளது.

17. (1) அமைச்சரின் முற்போந்த எழுத்திலான அங்கீகாரமின்றி, 2 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்களுள் எவற்றிற்கேனும் ஏதேனும் உடலை அல்லது ஏதேனும் இழையத்தை அல்லது அதன் பாகத்தை, பெறுமதியான ஒரு பிரதிபயனுக்காக, ஆளெவரும் வாங்குதலோ, விற்றலோ, கையுதிர்த்தலோ அல்லது வேறுவகையில் கையாளுதலோ ஆகாது.

(2) அத்தகைய ஏதேனும் உடலை, இழையத்தை அல்லது அதன் பகுதியை பெற்றுப் பாதுகாத்து, மாற்றிப்பொருத்துவதற்கு அத்தகைய ஆளுக்குப் போதுமான வசதிகள் உள்ளனவென்றும், அத்தகைய ஆள் உடலை, இழையத்தை அல்லது அதன் பகுதியை இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்குள் எதற்கும் மட்டுமே பயன்படுத்துவாரென்றும் அமைச்சர் திருப்திப்பட்டாலொழிய அவர் அத்தகைய அங்கீகாரத்தை வழங்குதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவுக்கு முரணைச் செயலாற்றுகின்ற ஆள் எவரும், தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவான் ஒருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஈராண்டுகளை விஞ்சாதவொரு காலத்துக்கான இரு வகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஆயிரத்தைநூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை, குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

தகவலை வெளியிடுதல்.

18. (1) (அ) எவ்வாள் இச்சட்டத்தின்கீழ் சம்மதமொன்றைக் கொடுத்திருக்கிறாரோ அல்லது கொடுக்க மறுத்திருக்கிறாரோ அவ்வாளினது ; அல்லது

(ஆ) சம்மதமானது எவ்வாள் தொடர்பாக, இச்சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளதோ அவ்வாளின் ; அல்லது

(இ) எவ்வாளினது உடலுக்குள் இழையமொன்று மாற்றிப் பொருத்தப்பட்டிருக்கின்றதோ, பொருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறதோ அல்லது பொருத்தப்படக் கூடுமோ அவ்வாளினது,

ஆளடையாளம் பகிரங்கமாக அறியப்படக்கூடிய ஏதேனும் தகவலை அல்லது ஆவணத்தை ஆளெவரும் வேறெவரேனும் ஆளுக்கு வெளிப்படுத்துதல் அல்லது கொடுத்தல் வேண்டுமென சட்டமுறையாகத் தேவைப்படுத்தப்பட்டலேயொழிய, அவ்வாறு செய்தல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவுக்கு முரணுகச் செயலாற்றுகின்ற ஆளெவரும், தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானெருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது ஓராயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகைய மறியற்றண்டனை குற்றப்பணம் ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

19. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் கீழ் எவரேனும் ஆளினது இறப்பின் காரணத்தை நிலைநாட்டும் அல்லது உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக அல்லது அத்தகைய இறப்புக்கு வழிகோலுகின்ற அசாதாரணமான நிலைகளின் உளதாந்தன்மை அல்லது தன்மை பற்றிப் புலனுயும் நோக்கத்துக்காக எவரேனும் விசாரணையாளரினுல் நடாத்தப்படும் ஏதேனும் விசாரணைக்கு இச்சட்டத்திலுள்ளதெதுவும் ஏற்புடைத்தாதலாகாது. இச்சட்டத்திலுள்ளதெதுவும் மரணங்கள் சம்பந்தமாக நடைபெறும் விசாரணைகளுக்கு ஏற்புடைத்தாதலாகாது.

20. (1) மனித இழையம் மாற்றிப்பொருத்துதல் மீதான தொழில்நுட்பமதியுரைப் போவை என அழைக்கப்படவேண்டிய போவையொன்று (இது இதனகத்துப்பின்னர் "போவை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் உறுப்பினர்களை கொண்டதாக இருத்தல் வேண்டும் :— மதியுரைப் போவை.

(அ) அமைச்சரினுல் நியமிக்கப்படும் அறுவை மருத்துவத் துறையைச் சேர்ந்த மருத்துவ ஆலோசகர்களும், பொது மருத்துவத்துறையைச் சேர்ந்த மருத்துவ ஆலோசகர்களும் (இவர்கள் இதனகத்துப் பின்னர் " நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் " எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ;

(ஆ) அப்போதைக்குப் பின்வரும் பதவிகளை வகிக்கும் வேறு ஐந்து உறுப்பினர்கள் (இவர்கள் இதனகத்துப் பின்னர் "பதவி வழி உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுவர்)—

(i) போவையின் தவிசாளராக இருக்கவேண்டிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமை அதிபதி ;

(ii) போதனு வைத்தியசாலைகளின் பணிப்பாளர் தலைமை அதிபதி ;

(iii) போவையின் செயலாளராக இருக்கவேண்டிய சுகாதார சேவைப் பிரதிப் பணிப்பாளர் தலைமை அதிபதி ;

(iv) கொழும்பு நீதி நிருவாக மருத்துவ அலுவலர் ; அத்துடன்

(v) அதேபோன்ற தன்மையில் தொழில் பார்க்கும் எவரேனும் மருத்துவ அலுவலர்.

(2) நியமிக்கப்பட்ட ஒவ்வோர் உறுப்பினரும் அவரது இறப்பு, பதவி விலகல் அல்லது பதவியிலிருந்து அகற்றிவிடுதல் காரணமாக தமது பதவியை முன்னரே வறிதாக்கினாலேயொழிய மூன்றாண்டு காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) அமைச்சர், எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினரை அதற்கான காரணம் எதனையும் காட்டாது அகற்றுதல் உகந்தது எனக் கருதினால் அவ்வாறு செய்யலாம்.

(4) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எந்நேரத்திலும் அப்பயன்பட அமைந்த அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் அவரது பதவியிலிருந்து விலகலாம்.

(5) நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் இறந்தால், பதவிவிலகினால் அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டால், அமைச்சர், அவ்வுறுப்பினரை அடுத்துறுகின்ற வேறோர் ஆளை, அவ்வுறுப்பினரின் இடத்துக்குப் பதிலாக நியமிக்கலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும், அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ, அவ்வுறுப்பினரின் முடிவுறாது எஞ்சியுள்ள பதவிக்காலத்துக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(7) அகற்றப்படுதல் காரணமாகவல்லாது வேறுவகையில் பதவியை வறிதாக்குகின்ற நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் 2 ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மூன்று ஆண்டுகாலப்பகுதி முடிவுற்றதன் பின்னர் மீள நியமிக்கப்படத் தகவுடையவராதல் வேண்டும்.

(8) பேரவையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

(9) பேரவையானது அதன் கூட்டங்கள் தொடர்பாகவும் அத்தகைய கூட்டங்களின் போது அலுவல்களைக் கையாளுவது தொடர்பாகவும் நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

(10) பேரவையின் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமை காரணமாக மட்டும் அல்லது பேரவையின் உறுப்பினர் எவரதும் நியமனத்தில் உள்ள குறைபாடு காரணமாக மட்டும் பேரவையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றனவெனக் கருதப்படுதல் ஆகாது.

**பேரவையின் கடமைகள்.**

21. இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நிருவாகத்திலிருந்தும், செயற்படுத்துதலிலிருந்தும் எழுகின்ற விடயங்களின் மேல், அமைச்சருக்கு ஆலோசனை அளித்தல், பேரவையின் கடமையாதல் வேண்டும்.

ஒழுங்குவிதிகள்.

22. (1) இச்சட்டத்தால் விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பில் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டதோ, அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் அவ்வாறு ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், கசெற்றில் வெளியிடப்பட்டதன்பின்னர், வசதியான விரைவில் அங்கீகாரத்துக்காகப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டு வரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் பெறாத ஒழுங்குவிதி எதுவும் அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால், அதன்கீழ் அதன் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எந்த தேதியன்று ஏதேனும் ஒழுங்குவிதி ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு, கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்.

23. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி—

"பிள்ளை" என்பது இருபத்தொரு வயதுக்குக் குறைந்த வயதுடைய ஆளொருவர் என்று பொருள்படும்.

"தகுதிவாய்ந்த சாட்சிக்காரர்" என்பது பதினெட்டு வயதுக்குக் குறையாத சாட்சிக்காரர் ஒருவர் எனப் பொருளாகும்;

"பல் மருத்துவர்" என்பது மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பல் மருத்துவரொருவராகப் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் எனப் பொருளாகும்;

"மருத்துவ ஆலோசகர்" என்பது மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு மருத்துவத் தொழிலராகப் பதிவு செய்யப்பட்டவரும் விதித்துரைக்கப்பட்ட முதுமாணிப் பட்டப் பின்படிப்புத் தகைமைகளுள் ஏதேனும் ஒன்றை உடையவரும் ஆன ஆளொருவர் எனப் பொருள்படும்;

"மருத்துவத் தொழிலர்" என்பது மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒரு மருத்துவத் தொழிலராகப் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் எனப் பொருளாகும்;

"மீளப்பிறப்பாக்கத்தகா இழையம்" என்பது மீளப் பிறப்பாக்கத் தகும் இழையம் தவிர்ந்த ஏனைய இழையம் எனப் பொருளாகும்;

"மறியற்சாலை" என்பது மறியற்சாலைகள் கட்டளைச் சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்;

"மீளப்பிறப்பாக்கத்தகு இழையம்" என்பது, ஊறு அல்லது அகற்றுகையின் பின்னர், இயற்கையான வளர்ச்சி முறையால் அல்லது திருத்துதலினால் உயிருடனிருக்கும் ஆளொருவரின் உடலில் மாற்றீடு செய்யப்பட்ட இழையம் எனப் பொருளாகும்;

"இழையம்" என்பது ஏதேனும் மனித சதை, உறுப்பு, எலும்பு அல்லது உடற்றிரவம் அல்லது அதன் பாகமெனப் பொருளாகும்;

*பாராளுமன்றத்தின் சட்ட மூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*